**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 126 - கல்வி அமைச்சு**

**1. செயற்பணியும் பிரதான பணிகளும்**

**(அ) செயற்பணி**

உரிய தரப்பினர் திருப்தியடையக்கூடியவாறு செயற்திறனானதும் உயர் தரத்தையுடையதுமான கல்வியில் நவீனமயப்படுத்தப்பட்ட மற்றும் நூதனமான நுழைவு மூலம் சர்வதேச ரீதியில் முன்னனியில் திகழக்கூடியவாறு திறமையான மானுட சமூகமொன்றை உருவாக்குதல்.

**(ஆ) பிரதான செயற்பாடுகள்**

(i) கல்வித் துறையில் கொள்கைகளை உருவாக்குதல்

(ii) சாதாரண கல்விக்கான நியம தரத்தினை நிர்ணயித்தலும் பேணுதலும்.

(iii) பாடவிதானத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்,

(iv) கல்வித்துறை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகள்

(v) நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை திட்டமிடல், அமுல்ப்படுத்துதல் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்

(vi) மனித வள அபிவிருத்தி

(vii) உயர்கல்வியின் அபிவிருத்திகளைக் கருதி இருதரப்பு மற்றும் பலதரப்பு ரீதியாக வெளிநாட்டுத் தொடர்புகளை பேணுதல்

(viii) பரீட்சை நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்.

**2 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் அவற்றை கணக்காய்வுக்காகச் சமர்ப்பித்தல் நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளது.

| **கணக்கின் பெயர்** | **கணக்கிலக்கம்** | **2010 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு கணக்காய்வுக்காக கணக்குகளைச் சமர்ப்பித்தல்** |
|---|---|---|
| ஒதுக்கீட்டுக் கணக்கு | 126 | சமர்ப்பிக்கப்பட்டிருந்தது |
| அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு | 12601 | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**தலைப்பு 126**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்**

| செலவினத்தின் தன்மை | வருடாந்த மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | எல்லாச் சீராக்கங்களின் பின்பு தேறிய நிதியேற்பாடு* | உள்ளவாறான செலவினம் (2008.12.31.இல் உள்ளவாறு) | சேமிப்புக்கள் (2008.12.31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவருபவை | 21,166,132,000 | 21,818,845,000 | 21,511,613,873 | 307,231,127 |
| மூலதனம் | 4,503,550,000 | 4,397,017,000 | 3,753,262,672 | 643,754,328 |
| மொத்தம் | 25,669,682,000 | 26,215,862,000 | 25,264,876,545 | 950,985,455 |

* 142 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட ஏற்பாடு, குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கங்கள், நி.பி. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் என்பவற்றிற்காக சீராக்கங்கள் செய்யப்பட்டதை அடுத்து தேறிய ஏற்பாடு.

**(ஆ) நிதி ஏற்பாடுகளின் குறைப்பயன்பாடு**

மீளாய்வாண்டு தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏற்பாடுகளில் குறைப் பயன்பாடு அறிவிக்கப்பட்டிருந்தது.

| | சதவீதம் |
|---|---|
| - மொத்த தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக மொத்த பயன்பாடு | 96.37 |
| - மொத்த தேறிய மூலதன ஏற்பாட்டின் சதவீதமாக செலவு செய்த அளவு | 85.35 |

* 58 செலவின விடயங்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 160,471,716 கூட்டுத்தொகையான மீண்டெழும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

* 90 செலவின விடயங்களுக்கு உரித்தான மூல ஏற்பாட்டில் 50% இற்கும் மேலாக அதாவது ரூபா 1,591,659,074 சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 முற்பணக்கணக்குகள்

#### 3.2.1 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்குகள்

(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய 12601 ஆம் இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு 2010 மே 31 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிற்குரிய முற்பணக் கணக்கு 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**(ஆ) நிலுவைக்கடன் மீதி (2008.12.31 இல் உள்ளவாறு)**

2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்வருமாறு ரூபா 237,623,839 தொகையான கடன் மீதிகளின் அறவீடுகள் நிலுவையாக இருந்ததுடன் அந் நிலுவை மீதிகளின் தொடர்பான காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| | விபரம் | நிலுவைத் தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| i | சேவை நிலைய மாற்றம் | 206,603,038 |
| ii | ஓய்வுபெறல் மற்றும் மரணம் | 20,731,241 |
| iii | சேவையை விட்டுச் செல்லல்/ வேலையிலிருந்து இடைநிறுத்தி வைத்தல் | 8,914,538 |
| iv | சேவையிலிருந்து விடுவித்தல் மற்றும் வெளிநாட்டிற்குச் செல்ல் | 1,375,022 |
| | கூட்டுத்தொகை | 237,623,839 |

(ii) பல வருடகாலமாக நிலவிவரும் ரூபா 60,576,495 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகளை 2008 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தனிப்பட்ட கணக்கு மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத் தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் இடையே ரூபா 113,297 தொகயான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(iv) தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் இணக்கக்கூற்றின் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டிராத மீதி ரூபா 269,017 ஆகக் காணப்பட்டது.

(v) மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு பொறுப்பளிக்கப்படாதிருந்த மொத்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,227,533 ஆக இருந்தது.

(vi) அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கும் 9 பயிற்சிக் கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 40% ஆன ஏற்பாடு எஞ்சியிருந்தது.

## 3.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்குகள்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சிடம் ரூபா 21,132,765 தொகையான கட்டுநிதி வரவு மீதி இருந்தது. அம்மீதிகள் 2010 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை தீர்க்கப்படாதிருந்தன.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 537,983,055 ஆக இருந்தது. பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொது வைப்புக்கள் மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்படி மீதியில் நிதிப் பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,646,421 ஆக இருந்தது.

(iii) நிதிப்பிரமாணம் 427 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்குகளின் மீதிகள் திறைசேரிப் புத்தகங்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் நேரடியாக அமைச்சிற்கு கிடைத்திருந்த ரூபா 146,749,017 தொகை திறைசேரிக்கு அனுப்பப்டாமல் பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது

**4. சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்**

(i) நீண்ட காலத்திற்கான திட்டங்கள் இல்லாது பாடவிதானங்கள் அறிமுகப்படுத்தல், காலத்திற்குக் காலம் திருத்தங்கள் செய்தல் மற்றும் வரையறுத்தல் போன்ற காரணங்களினால் தொழிநுட்பவியலாளர். இலத்திரனியல், விஞ்ஞானம் (இயந்திர மற்றும் சிவில்), புடவைக் கைத்தொழில், உலோக வேலை மற்றும் நிர்மாணிப்புத் தொழிநுட்பம் ஆகிய பாடங்கள் பாடசாலைகளிலிருந்து அகற்றப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பாடங்களின் செய்முறைகளுக்காக வழங்கப்பட்டுள்ள அதிக பெறுமதிவாய்ந்த பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாது சேதமடைந்து போகும் நிலை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) 7 கஸட் ரெக்கோடர்கள், இரு தையல் இயந்திரங்கள், ஆங்கில குறுங்கதைப் புத்தகங்கள், உழவு இயந்திர உபகரணங்கள் முதலியன கொழும்பு வலயக் கல்விக் காரியாலயக் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) 2009 சனவரி மற்றும் ஒக்டோபர் மாதங்களில் கிடைக்கப்பெற்றிருந்த 13 கணனிகளும் 3 கணனிகளும் 2010 யூலை 09 ஆம் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்**

நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு நி.பி 757(4) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2004 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2010 மே மாதம் வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமரப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

**5. இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், நிதிப்பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) தாபன விதிக் கோவை** | |
| (i) vii ஆம் அத்தியாயத்தின் 12.5.2 ஆம் பந்தி | கல்வி நிர்வாகச் சேவையில் I ஆம் தரத்தில் வெற்றிடமாகவுள்ள 8 பதவிகளின் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களுக்கு உரிய ஏற்பாடுகளுக்கு முரணாக 12.5.4 ஆம் பந்தியின் பிரகாரம் 1999 ஆம் ஆண்டு முதல் கணிப்பிடப்பட்ட |

ரூபா 3,786,711 தொகை பதில் கடமைச் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) xii ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி — ஏற்கெனவே வேலீவுகளுக்காக அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஆசிரியர்கள் லீவைப் பெற்றிராத காரணத்தினால் பாடசாலைகளின் நாளாந்தக் கற்பித்தல் செயற்பாட்டில் குறைபாடுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

13 ஆம் பந்தி — ஏற்பாடுகளுக்கு முரணாக பல்கலைக்கழகளில் வெளிவாரி விரிவுரைகளை நடாத்துவதற்காக ஒரு ஆசிரியருக்கு 70 நாள் உத்தியோகபூர்வ விடுமுறை 2007 முதல் 2009 யூலை வரை அனுமதிக்கப்பட்டிருந்தது.

(iii) xxviii ஆம் அத்தியாயத் தின் 1.3 ஆம் பந்தி — பாடசாலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது ஆசிரியர்கள் வெளிச்செல்கையைக் குறிப்பிடாது வெளி யேறியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப் பட்டன.

(ஆ) நிதிப்பிரமாணம்

------------------------

(i) நி.பி. 66, 69 — கட்டுப்பாடுகள் இன்றி செலவின விடயங்களுக்கு இடையே ஏற்பாடுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 2,005,526,216 தொகையான ஏற்பாடுகள் 169 செலவின விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்ததாகவும் இதில் ரூபா 88,948,157 தொகை ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது.

(ii) நி.பி. 94(1) — 10 செலவின விடயங்களுக்கு உரித்தான சேமிப்புகளுக்கு மேலாக ரூபா 388,738,359 தொகையான கட்டுப்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

(iii) நி.பி. 1646 — குழாம் வாகனத்திற்காக ஓட்டக் குறிப்புக்கள் பேணப்பட்டிராததுடன் அவ் வாகனத்திற்காக 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 405,316 மற்றும் ரூபா 388,445 தொகைகளான எரிபொருட்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2006 மே 24 ஆம் திகதிய 6/2006 ஆம் இலக்க 2007 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 6/2006(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை — கொழும்பு கல்வி வலையத்திலுள்ள 331 ஆசிரியர்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23.3 மில்லியன் நிலுவையான திருத்திய சம்பளத்தைச் செலுத்த நேரிட்ட போதிலும் இக் கொடுப்பனவிற்காக கட்டுநிதியைத் விடுவிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை

------------------------------------------

(i) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/2 ஆம் இலக்கச் சுற்றறிக்கை — கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு அமைச்சுக்கள் மற்றும் தேசிய பாடசாலைகளில் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2001 யூலை 02 ஆம் திகதிய எம்எப்/ஜீஏ2/ சுற்றறிக்கை 2001/03 ஆம் இலக்க சுற்றறிக்கை — வெளிநாட்டுப் பயிற்சியைப் பூர்த்திசெய்து நாட்டிற்கு வருகை தந்திருந்த உத்தியோகத்தர்களினால் இரு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பயிற்சி தொடர்பான அறிக்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ( ஊழியர் தொடர்பு) இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அமைச்சுச் சுற்றறிக்கை

----------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 2008 செப்தெம்பர் 19 ஆம் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கை | தேசிய பாடசாலைகளில் 2 இலிருந்து 11 ஆம் தரங்களுக்கு மாணவர்களைச் சேர்க்கையில் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மாறாக செயற்பட்டிருந்த பின்வரும் அவதானிப்புகள் காணப்பட்டன.<br>• 3 பாடசாலைகளில் 117 மாணவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருத்தல்<br>• 2 பிரசித்த பாடசாலைகளுக்கு வகுப்பில் இருக்க வேண்டிய ஆகக் கூடிய எல்லைக்கு மேலாக 50 மாணவர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (ii) | 2007 திசெம்பர் 13 ஆம் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை | தெரிவுக் கணக்காய்விற்கு உள்ளாக்கப்பட்ட 22 பாடசாலைகளுக்கு 10 ஆண்டுகள்- 30 ஆண்டுகளுக்கு இடையிலான காலமாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிய 990 ஆசிரியர்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (iii) | 2003 நவம்பர் 27 ஆம் திகதிய 2003/28 ஆம் இலக்க சுற்றறிக்கை<br>21.2 ஆம் பந்தி | ஒரு ஆசிரியருக்கு ஒரு கிழமைக்கு 33 – 35 காலப்பகுதியையும் மேற்பார்வைக்குப் பொறுப்பான ஆசிரியர் ஒருவருக்கு கிழமைக்கு 18 காலப்பகுதியையும் பூர்த்தியாக்கும் விதத்தில் நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 4 பாடசாலைகளுக்கு உரித்தாக மேற் கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது 63 பேருக்காக 6 – 30 காலப்பகுதியாகும் வகையில் நேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்ததாகவும் 26 ஆசிரியர்களுக்காக எவ்வித கடமைகளும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. |
| (iv) | 2006 யூன் 20 ஆம் திகதிய 2006/27 ஆம் இலக்க சுற்றறிக்கை<br>8.2.1 மற்றும் 8.2.2 ஆம் பந்தி | பாடசாலைகளினால் வலயக் கல்விக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட மாணவர்களின் மாணவ உதவிக்கு உரித்தான உறுதிச் சீட்டுக்கள் உரிய மாதத்தின் 25 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்காக உரிய வங்கிக் கிளைகளுக்கு சமாப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு கல்வி வலயத்தில் 2008 ஆம் ஆண்டிற்குரிய மாணவர் உதவிப் பணம் ரூபா 660,500 தொகையும் 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,029,000 தொகையும் உரிய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 2005 செப்தெம்பர் 30 ஆம் திகதிய 2005/29 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | ஆரம்பப் பிரிவு முதல் உயர் தரம் வரை பாடங்களைக் கற்பிப்பதற்காக பொருட்களாக தகவல் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களின் பயன்பாடு தொடர்பான ஆரம்ப நுட்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (vi) | 2003 நவம்பர் 07 ஆம் திகதிய 2003/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | கொழும்பு வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய 19 தேசிய பாடசாலைகளில் விடயத்திற்கு பாடங்களுக்குரிய 451 ஆசிரியர்களின் மிகையும் 452 பேரின் பற்றாக்குறையும் நிலவின. |
| (vii) | 2002 திசெம்பர் 04 ஆம் திகதிய கல்விச் செயலாளரின் வழிகாட்டிக்கோவை | தரமான உள்ளீடு தொடர்பாக 7 பாடசாலைகளுக்கு 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 600,298 கூட்டுத்தொகையான மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் இல் உள்ளவாறும் பயன்படுத்தப்படாது வங்கிக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்டிருந்தது. |

**6. கணக்காய்விற்கான சான்றின்மை**

**(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

மீளாய்வாண்டில் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட 14 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் அனுப்பப்பட்ட 40 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2010 ஏப்ரல் 30 வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| ஆண்டு | ஐய வினாக்களின் மொத்த எண்ணிக்கை | பதிலளிக்கப்படாத ஐய வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2009 | 23 | 14 |
| 2008 | 36 | 23 |
| 2007 மற்றும் அதற்கு முன்னர் | 48 | 17 |

**(ஆ) தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

மாணவர்களுக்காக விசேட சேவை வழங்கலின் கீழ் கட்புல மற்றும் செவிப்புலக் குறைபாடுகளுடைய மாணவர்களுக்கு கண்ணாடிகளும் கேள்வி உபகரணங்களாகும் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 1 மில்லியனும் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1.5 மில்லியனும் வலயக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் பணம் குறிப்பாக உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தி உரிய உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

2009 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**(அ) பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

2007 ஆம் ஆண்டு முதல் நிலவும் சித்திரம் மற்றும் சங்கீத ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காது தேசிய பாடசாலை அதிபரின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு கல்விசாரா பதவியணி உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் கல்விக் காரியாலயங்களில் ஈடுபடுத்தப்படுவதற்கு தேசியப் பாடசாலைப் பணிப்பாளரினால் 2009 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது கற்பித்தல் நடவடிக்கையின் தரம் குறித்து பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செயற்திட்ட அமுலாக்கலிலான தாமதம்**

தேசிய பாடசாலையில் ''பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியம்'' உறுதிப்படுத்தும் நோக்கில் பேணப்பட்ட ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ரூபா 20 பெறுமதியான 100,000 டிக்கட்டுக்கள் அச்சிடப்பட்டு டிக்கட்டுக்களின் விற்பனை மூலம் ரூபா 2,000,000 வருமானமும் ரூபா 1,800,000 தொகையான இலாபமும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 1,205,700 தொகையான வருமானமும் ரூபா 1,085,130 தொகையான இலாபமும் மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

விற்பனை செய்யப்பட்டிராத 19,555 டிக்கட்டுக்கள் மீள வழங்கப்பட்டிராததுடன் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த

பாடசாலை மாணவர்களிடையே வழங்கப்பட்டிருந்த 187 டிக்கட்டுக்களும் மீள வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் மாணவர்கள் முறையற்ற விதத்தில் பணத்தைச் செலவிடப்பட்டிருக்கலாம் என அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத செயற்பாடுகள்

அமைச்சு, தனது பிரதான செயற்பாடுகளில் இருந்து மாறாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்துடன் தெரிவுக்கணக்காய்வின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

(i) தோட்டப்பாடசாலை மாணவர்களின் 2009 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றை உயர்த்துவதற்காக தோட்டப்பாடசாலை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 7 வலயக்கல்விக் காரியாலயங்களில் இருந்தும் 3 மாவட்டங்களில் இருந்தும் வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 96% புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றிராமையும் இதில் 60% இற்கு மேற்பட்ட அளவிலானோர் 100 இற்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 16 வலயக் கல்விக் காரியாலயங்களிலும் 3 மாவட்டங்களில் இருந்தும் தோற்றிய தோட்டப்பாடசாலைகளில் 2008 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் படி, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் விஞ்ஞான பாடத்தை 78% ஆனோரும் கணித பாடத்தை 70% ஆனவர்களும் ஆங்கில பாடத்தில் 83% ஆனவர்களும் சித்தியெய்தியிராமை அவதானிக்கப்பட்டது.

(iii) புதிய மாதிரி ஆரம்ப பாடசாலைகளின் கணனி அறிவுப் பயிற்சி மற்றும் இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 1.5 மில்லியன் தொகையில் ரூபா 1,329,750 தொகை 7 மாகாணக் கல்விக் காரியாலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் 10 கணனி பயிற்சிச் செயலமர்வுகள் மற்றும் 15 இயலுமை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எவ்வித நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) நூலக காரியாலய முறை தொடர்பாக எவ்வித அனுபவமும் இல்லாத ஊழியர்கள் நூலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை, விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள் தாமதமின்றி மீளப் பெறப்படும் உபாயமார்க்கங்களைத் தயாரித்திராமை, பாடசாலை ஆசிரியர்கள் வெளிநாட்டிற்குச் செல்லுதல், இடமாற்றமாதல் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற சந்தர்ப்பங்களின் போது நூலகத்தில் இருந்து பெறப்படும் புத்தகங்கள் முறையாக மீள ஒப்படைக்கப்பட்டு விடுவிக்கப்படும் முறை செயற்படுத்தப்படாமை, ஒரு அங்கத்தவருக்கு ஒரு தடவையில் நூலகத்தில் இருந்து வெளியே கொண்டு செல்லக் கூடிய ஆகக் கூடிய புத்தகங்களின் எண்ணிக்கை தொடர்பான வரையறைகளும் விதிக்கப்பட்டிராமை போன்ற காரணங்களினால் பாடசாலை நூலக நிர்வாக முறைமை மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டது. நூலகத்தில் இருந்த அதிகளவான புத்தகங்கள் மேற்குறித்த காரணங்களினால் நூலகங்களுக்குக் கிடைக்கப்பெறாது போயிருந்தன.

(ஈ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மூன்றாம் நிலைக் கல்விக்கு உரித்தான தொழிற்திறன் நுட்ப தொழில் முயற்சிகள் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அவ் விடயத்துறைக்கு எவ்வித தொடர்பும் இல்லாத அமைச்சின் இரண்டு உத்தியோகத்தர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 1,286,997 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 8 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடங்கள்

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| i | நிறைவேற்று தரம் | 52 | 46 | 07 | 01 |
| ii | நிறைவேற்று தரம் அல்லாதவை | 2,186 | 1,200 | 986 | - |
| iii | கனிஷ்ட தரம் | 255 | 240 | 22 | 07 |
| | மொத்தம் | 2,493 | 1,486 | 1,015 | 08 |

குறிப்பு:- கல்வி நிர்வாக சேவையினதும் ஆசிரியர் சேவைக்கும் உரிய பதவியணி எண்ணிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் மேலுள்ள தகவல்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 9 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) பதிவேடுகளைப் பேணல்

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ளவாறு ஏடுகள் பராமரிக்கப்படாமல் இருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பராமரிக்கப்படாமல் இருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்கம் மற்றும் 2002 திசெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| நட்டங்கள் சேதங்கள் பதிவேடு | நி.பி.110 |
| வாக்குப்பணப் பேரேடு | நி.பி. 447 |
| வாகன நாளோட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்புகளும் | நி.பி. 1646 |
| வசதிகள் மற்றும் சேவைக் கட்டணப் பதிவேடு (தேசிய பாடசாலை) | |
| லீவுப் பதிவேடு (தேசிய பாடசாலை) | |

### (ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு செயற்படுத்தப்படல்

2000 மார்ச் 15 ஆம் திகதிய பிஎப்/பீஈ/7 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட படி நடாத்தப்பட்டிருக்கவில்லை.